# அமிருத சுவாதினி

1:##
மூலங் கிளேயென* ஒன்றிரண்டான மொழியிரண்டும் *
மேலொன்றிலேயென நின்ற* அவ்வித்தகன் தன்னுரையும் *
காலம் கழிவதன் முன்னம்* கருத்துறக் கண்டிடவே *
ஞாலம் புகழும்* நம் தேசிகர் தாம் நம்மை வைத்தனரே. (2)

2:
காரணமும் காவலனுமாகி * என்றும்
கமலேயுடன் பிரியாத நாதனுன *
நாரணனுக்கு அடியேன் நான் அடிமை பூண்ட *
நல்லடியார்க்கு அல்லான் மற்றொருவர்க்கு அல்லேன் *
ஆரணங்கள் கொண்டு அகமும் புறமும் கண்டால் *
அறிவாகி அறிவதுமாய் அறு நான்கன்றிச் *
சீரணிந்த சுடர் போலத் திகழ்ந்து நின்றேன் *
சிலே விசயன் தேரனேய சிறுவேதத்தே.

3:
யான் எனதென்பதொன்று இல்லே* என் செய்வது அவனேயல்லால் *
ஆனது அறிந்திடும்* தன்னடியார்க்கு என ஆட்படுத்தித் *
தானென்ன நல்கி நடத்துகின்றுன்* தன்னருள் வழியே *
நானுனே வீடு செய்வேனென்ற* நம் திரு நாரணனே.

4:
யாதாமிவை அனேத்தும்* படைத்தேந்தும் இறைவனுமாய்க் *
கோதாம் குணங்களுடன்* குறுகாத குணத்தனுமாய் *
மாதா பிதாவென* மன்னுறவாய்க் கதியென்ன நின்றுன் *
போதார் திருவுடன்* பொன்னருள் பூத்த நம் புண்ணியனே.

5:
இருவிலங்கு கழித்திடராம் உடலந்தன்னில் *
இலங்கு நடு நாடியினுல் எம்மை வாங்கி *
ஒருவிலங்கு நெறியல்லா வழியால் மன்னும் *
உயர் வானிலேற்றி உயிர் நிலேயும் தந்து *
பெருவிலங்காம் அருள் தன்னுல் தன்னடிக்கீழ்ப் *
பிரியாத அமரருள் பிணேத்துத் தன்னுர் *
உருவில் அங்கும் இசைவிக்கும் உம்பர் போகம் *
உகந்து தரும் திருமாலே உகந்தோம் நாமே.

6:
உறவை இசைந்து இறையில்லா ஒருவற்கு என்றும் *
ஒண் சுடராய் ஓரெழுத்தில் ஓங்கி நின்றோம் *
துறவறமும் தூமதியும் துயரம் தீர்வும் *
தூயவர்க்கட்கு ஆனமையும் இரண்டிலுற்றோம் *
அறமுயலும் அனேத்துறவாய் அனேத்தும் ஏந்தும் *
அம்புயத்தாள் கணவனே நாம் அணுகப் பெற்றோம் *
பிறவியறுத்து அடிசூடி அடிமையெல்லாம் *
பிரியாத அமரருடன் பெற்றோம் நாமே.

7
கருமமென ஞானமென அதனுல் கண்ட *
உயிர் கவரும் காதலெனக் கானிலோங்கும் *
அருமறையால் தரு நிலையில் இன்னுள் எல்லாம் *
அடியேனை அலையாத வண்ணம் எண்ணித் *
தருமம் உடையார் உரைக்க யானறிந்து *
தனெக்கென்னு அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித் *
திருமகளோடு ஒருகாலும் பிரியா நாதன் *
திண்கழலே சேதுவெனச் சேர்கின்றேனே.

8:
வினைவிடுத்து வியன் குணத்தால் எம்மையாக்கி *
வெருவுரைகேட்டு அவைகேட்க விளம்பி நாளும் *
தனையனைத்தும் அடைந்திடத் தானடைந்து நின்ற *
தன் திரு மாதுடன் இறையும் தனியா நாதன் *
நினை வழிக்கும் வினைவழிக்கு விலக்காய் நிற்கும் *
நிகரில்லா நெடுங்குணங்கள் நிலைபெறத் * தன் –
கனைகழல் கீழ் அடைக்கலமாக் காட்சி தந்து *
காரணனும் தன் காவல் கவர்கின்றுனே.

9:
என்னது யான் செய்கின்றேன் என்னுதாருக்கு *
இன்னடிமை தந்தளிப்பான் இமையோர் வாழும் *
பொன்னுலகில் திருவுடனே அமர்ந்த நாதன் *
புனலாரும் பொழிலரங்கன் திகழ மன்னித் *
தன் அகலம் அகலாத தகவாலோங்கும் *
தகவுடனே தன் கருமம் தானே எண்ணி *
அன்னையென அடைக்கலம் கொண்டஞ்சல் தந்து * என் –
அழலாற நிழலார அளிக்கின்றுனே.

10:
ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி *
ஒரு நினைவாலீன்ற உயிரெல்லாம் உய்ய *
வண்துவரை நகர்வாழ் வாசுதேவற்காய் *
மன்னவற்குத் தேர்ப்பாகனுகி நின்ற *
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன *
தனித் தருமன் தான் எமக்காய்த் தன்னையென்றும் *
கண்டு களித்து அடி சூட விலக்காய் நின்ற *
கண் புதையல் விளையாட்டைக் கழிக்கின்றுனே.

11:
துய்ய மனத்தர்* துறை அணுகாத துணையிலியேன் *
ஐயமறுத்து உனதாணை* கடத்தல் அகற்றினை நீ *
கையமர் சக்கரக்* காவல் காக்கும் திருவருளால் *
வையமளந்த அடிக்கீழ்* அடைக்கலம் வைத்தருளே.

12:
அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம் *
அம்புயத்தாளுடன் அந்நாள் அவதரித்த *
குறையாதுமில்லாத கோவிந்தா* நின்—
குரைகழற் கீழ் அடைக்கலமாம் குறிப்புத் தந்தாய் *
வெறியாரு மலர்மகளும் நீயும் விண்ணில் *
விண்ணவர்கள் அடி சூட இருக்கு மேன்மை *
குறையாத வினை அகற்றி அடிமை கொள்ளக் *
குறுகவொரு நன்னாள் நீ குறித்திடாயே.

13:
தத்துவமும் சாதனமும் பயனும் காட்டும் *
தாரம் முதல் இரு நான்கும் தன் கருத்தால் *
முத்தி வழி நாமுயலும் வகையே காண *
முகுந்தன் இசைத்து அருள் செய்த ஐந்நாலைந்தும் *
பத்தி தனில் படிவில்லார் பரஞ்சுமத்தப் *
பார்த்தன் தேர் முன்னே தான் தாழ நின்ற *
உத்தமனூர் உத்தம நல்லுரை நாலெட்டும் *
உணர்ந்தவர் தாம் உகந்தெம்மை உணர்வித்தாரே.

14:
பரக்கும் புகழ்வரும்* பைம்பொருள் வாய்த்திடும் பத்தர்களாய் *
இரக்கின்றவர்க்கு இவையீந்தால்* அறமுளது என்றியம்பார் *
கரக்கும் கருதுடை* தேசிகர் கன்றென நமையெண்ணிச் *
சுரக்கும் சுரவிகள்போல்* சொரிகின்றனர் சொல்லமுதே.

15:
சோகம் தவிர்க்கும்* சுருதிப் பொருளொன்று சொல்லுகின்றோம் *
நாகம் தனக்கும் இராக்கதற்கும்* நமக்கும் சரணும் *
ஆகண்டலன் மகனாகிய* ஆவலிப்பேறிய * ஓர் –
காகம் பிழைத்திடக்* கண்ணழிவே செய்த காகுத்தனே.

16:
ஒருக்காலே சரணாக அடைகின்றாற்கும் *
உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும் *
அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும் *
அஞ்சேல் என்றருள் கொடுப்பன் இதுதான் ஓதும் *
இருக்காலும் எழில் முனிவர் நினைவினாலும் *
இவையறிவார் செயலுடன் என் இசைவினாலும் *
நெருக்காத நீள் விரதம் எனக்கொன்று என்னும் *
நெறியுரைத்தார் நிலையுணர்ந்து நிலை பெற்றோமே.

17:
பொன்னை இகழ்ந்து விருகங்கள்* புல்லிய புல்லுகந்தான் *
மன்னரெடுப்பது அப்பொன்னலதே* மன்னுலகனைத்தும் *
தன்னை அடைந்திடத்* தானருள் செய்யும் தனிச் சிலையோன் *
பொன்னடி நாமடைந்தோம்* புறமார் என்கொல் செய்திடினே.

18:
வேதத்திரளின் விதியுணர்ந்தோர்கள்* விரித்துரைத்த *
காதல் கதியையும்* ஞானத்தையும் கருமங்களையும் *
சாதிக்கவல்ல சரணாகதி* தனிநின்ற நிலை *
ஓதத்தொடங்கும் எழுத்தின் திறத்தில்* உணர்மின்களே.

19:
மூவுலகும் தன் பிழையைத் தானே சாற்ற *
முனிவர்களும் தேவர்களும் முனிந்த வந்நாள் *
தாவரிதாய் எங்கும் போய்த் தளர்ந்து வீழ்ந்த *
தனிக்காகன் தானிரந்த உயிர்வழங்கிக் *
காவலினி எமக்கெங்கும் கடன் என்றெண்ணிக் *
காண நிலை இலச்சினை அன்றிட்ட வள்ளல் *
ஏவல் பயன் இரக்கம் இதற்காறு என்றோதும் *
எழிலுடையார் இணையடிக்கீழ் இருப்போம் நாமே.

20:
திருத்தம் பெரியவர்* சேரும் துறையில் செறிவிலர்க்கு *
அருத்தங் கழிந்த* வழியருளென்ற நம் மண் மகளார் *
கருத்தொன்ற* ஆதிவராகம் உரைத்த கதியறிவார் *
பொருத்தந் தெளிந்துரைக்கப்* பொய்யிலா மதிபெற்றனமே.

21:
இடம்பெற்றார் எல்லாம் என்னுடலாய் நிற்ப *
இடர் பிறப்பென்றிவை இல்லா என்னை அன்பால் *
அடம் பற்றும் அவனென்று நினைந்தான் யாவன் *
அவனுவி சரியும் போது அறிவு மாறி *
உடம்பிற்றார் உபலம் போல் கிடக்க நானே *
உய்யும்வகை நினைந்துயர்ந்த கதியால் * என்தன்
இடம்பெற்றேன் உடன்வாழ வெடுப்பன் என்ற *
எம்பெருமான் அருள் பெற்று மருள் செற்றோமே.

22:
இரண்டு உரையாத* நம் மேனம் உரைத்த உரையிரண்டின் *
திரண்ட பொருள்கள்* தெளிந்தடி சூடினம் திண்ணருளால் *
சுருண்ட நல் ஞானச் சுடரொளி* சுற்றும் பரப்பதன் முன் *
புரண்டது நம்வினை* போமிடம் பார்த்து இனிப் போமளவே.

23:
மலையும் குலையும் என்றெண்ணியும்* வன் பெரும் புண் திரங்கித் *
தலையும் வெளுத்த பின்* தானே அழிய விசைகின்றிலீர் *
அலையுங்கடல் கொண்ட* வையமளித்தவன் மெய்யருளே *
நிலையென்று நாடி* நிலை நின்ற பொய்ம்மதி நீக்குமினே.

24:
கண்ணன் கழல் தொழக்* கூப்பிய கையின் பெருமைதன்னை *
எண்ணம் கடக்க* யமுனைத் துறைவர் இயம்புதலால் *
திண்ணமிது வென்று* தேறி தெளிந்தபின் சின்மதியோர் *
பண்ணும் பணிதிகள் பாற்றிப்* பழந்தொழில் பற்றினமே.

25:
பொங்கு புனல் ஆறுகளில் புவனமெல்லாம் *
பொற் கழலால் அளந்தவன் தன் தாளால் வந்த *
கங்கையெனும் நதிபோலக் கடல்களேழில் *
கமலி பிறந்து அவனுகந்த கடலேபோலச் *
சங்குகளில் அவனேந்தும் சங்கே போலத் *
தாரிலவன் தண் துளவத் தாரேபோல *
எங்கள் குலபதிகளிவை மேலாம் என்றே *
எண்ணிய நல்வார்த்தைகள் நாமிசைகின்றோமே.

26:
சீர்க்கடலின் திரையென்னத் தகவால்மிக்க *
தேசிகராய்த் திண்ணருளாங் கடலை நீக்கிப் *
பாற்கடலோன் திருவணையாய் நின்று * பாரங்
காணாத பவக்கடலைக் கடத்துகின்றான் *
ஈர்க்கு மரக்கலம் என்ன இறைவர் இன்பம் *
எழுந்தழியும் குமிழியென இகந்தொழிந்தோம் *
ஆர்க்கினி நாம் என் கடவோ நமக்கும் ஆரென்-
கடவாரென்று * அடைந்தவர்கட்கு அறிவித்தோமே.

27:##
காசினியின் மணியனைத்தும் காயா வண்ணன் *
கடைந்தெடுத்த கவுத்துவத்தின் சீர்மைக்கொவ்வா *
காசி முதலாகி நன் நகரியெல்லாம் *
கார் மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா *
மாசில் மனந்தெளி முனிவர் வகுத்தவெல்லாம் *
மாலுகந்த ஆசிரியர் வார்த்தைக் கொவ்வா *
வாசி அறிந்திவை உரைத்தோம் வையத்துள்ளீர் *
வைப்பாக இவை கொண்டு மகிழ்மினீரே. (2)

28:##
அந்தமிலாப் பேரின்பம் அருந்த வேற்கும் *
அடியோமை அறிவுடனே என்றும் காத்து *
முந்தை வினை நிரை வழியில் ஒழுகாது எம்மை *
முன்னிலையாம் தேசிகர் தம் முன்னே சேர்த்து *
மந்திரமும் மந்திரத்தின் வழியுங்காட்டி *
வழிப்படுத்தி வானேற்றி அடிமை கொள்ளத் *
தந்தையென நின்ற தனித் திருமால் தாளில் *
தலை வைத்தோம் சடகோபன் அருளினாலே. (2)

29:
தான் தனக்குத் தன்னுலே தோன்றித் * தன்னேர் –
ஒளி அணைக்குங் குணத்தாலும் தன்னைக் கண்டு *
தான் தனக்கென்று அறியாத தன்குணத்தைத் *
தன் குணத்தால் தானிறையில் தானே கூட்டி *
ஊன் மருத்துப் புலன் மன மான் ஆங்காரங்கள் *
ஒருமூலப் பிரகிருதி அன்றி நின்ற *
நான் தனக்குத் தான் தனக்கென்று இசைவு தந்த *
நாரணனை நான்மறையால் நான் கண்டேனே.

30:
கழியாத கருவினையில் படிந்த நம்மைக் *
காலமிது என்று ஒருகால் காவல் செய்து *
பழியாத நல்வினையிற் படிந்தார் தாளில் *
பணிவித்துப் பாசங்களடைய நீக்கிச் *
சுழியாத செவ் வழியில் துணைவரோடே *
தொலையாத பேரின்பம் தர மேலேற்றி *
அழியாத அருளாழிப் பெருமான் செய்யும் *
அந்தமிலா உதவியெலாம் அளப்பார் ஆரே.

31:##
நின்னருளாங் கதியன்றி மற்றொன்று இல்லேன்
நெடுங்காலம் பிழை செய்த நிலை கழிந்தேன் *
உன்னருளுக்கு இனிதான நிலையுகந்தேன் *
உன் சரணே சரணென்னும் துணிவு பூண்டேன் *
மன்னிருளாய் நின்றநிலை எனக்குத் தீர்த்து *
வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை *
இன்னருளால் இனி எனக்கோர் பரமேற்றுமல் *
என் திருமால் அடைக்கலங்கொள் என்னை நீயே. (2)

32:
பரவு மறைகளெல்லாம்* பதஞ் சேர்ந்தொன்ற நின்ற பிரான் *
இரவன்றி இரவியின்* காலத் தழைத்த எழிற்படையோன் *
அரவும் கருடனும் அன்புடன் ஏந்தும்* அடியிரண்டும் *
தர எந்தமக்கு அருளால்* தளரா மனந் தந்தனனே.

33:##
அலர்ந்த அம்புயத்து இருந்து தேனருந்தி இன்னகல் *
அல்குலார் அசைந்தடைந்த நடை கொளாத தனமெனே *
நலங் தவிர்ந்ததால் அதென்கொல் நாவின் வீறு இழந்ததால் *
நா வணங்கு நாதர் தந்த நாவின் வீறு இழந்த தென் *
சலங் தவிர்ந்து வாது செய்து சாடி மூண்ட மிண்டரைச் *
சரிவிலேன் எனக் கனைத்து உறைத்த வேதிராசர் தம் *
வலம் தரும் கை நாயனுர் வளைக்கிசைந்த கீர்த்தியால் *
வாரி பாலது ஆம் என்று மாசில் வாழி வாழியே. (2)

34:
சடையன் திறல் அவர்கள்* பெருஞானக் கடல் அதனை *
இடை அமிழாது கடக்கினும்* ஈதளவு என்று அறியார் *
விடையுடன் ஏழ் அன்று அடர்த்தவன்* மெய்யருள் பெற்ற நல்லோர் *
அடைய அறிந்துரைக்க* அவ் அடியோமும் அறிந்தனமே.

35:
பாவளரும் தமிழ்மறையின் பயனே கொண்ட *
பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தில் *
காவலனும் கணவனுமாய்க் கலந்து நின்ற *
காரணனைக் கறுத்துற நாம் கண்டபின்பு *
கோவலனும் கோமானுமான அந்நாள் *
குரவை பிணை கோவியர் தம் குறிப்பே கொண்டு *
சேவலுடன் பிரியாத பெடைபோல் சேர்ந்து *
தீவினையோர் தனிமையெலாம் தீர்ந்தோம் நாமே.

36:##
ஆதிமறை எனவோங்கும் அரங்கத்துள்ளே *
அருளாரும் கடலைக் கண்டவன் நம்பாணன் *
ஓதியதோர் இரு நான்கும் இரண்டுமான *
ஒரு பத்தும் பற்றாக உணர்ந்து உரைத்தோம் *
நீதியறியாத நிலை அறிவார்க்கு எல்லாம் *
நிலையிதுவே என்று நிலை நாடி நின்றோம் *
வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம் *
விதையாகும் இதுவென்று விளம்பினோமே. (2)

37:##
காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்று இன்றிக் *
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல் *
பாண்பெருமாள் அருள் செய்த பாடல் பத்தும் *
பழமறையின் பொருளென்று பரவுகின்றோம் *
வேண் பெரிய விரிதிரைநீர் வையத்துள்ளே *
வேதாந்த ஆரியன் என்றியம்ப நின்றோம் *
நாம் பெரியோம் அல்லோம் நாம் நன்றும் தீதும் *
நமக்குரைப்பார் உளரென்று நாடுவோமே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: